**செ.வெ.எண்: 11** **நாள்: 03.08.2016**

# பத்திரிகைச்செய்தி

தமிழகஅரசு பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 2016-17ம் கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான பணிநிரவல், மாறுதல், பதவி உயர்வு மற்றும் பொது மாறுதல்களுக்கான கலந்தாய்வு மாவட்டந்தோறும் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களுக்கு 2016-17-ம் ஆண்டுக்கான பதவி உயர்வு மற்றும் பொது மாறுதல்களுக்கான கலந்தாய்வு புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல்நிலைப்பள்ளியில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் தலைமையில் நடைபெற உள்ளது.

மேலும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் 19.07.2016 முதல் 28.07.2016 வரை ஆசிரியர் மாறுதலுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. வருகின்ற 03.08.2016 புதன்கிழமையன்று உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களின் பொது மாறுதல் குறித்த கலந்தாய்வும் (இணையதளம் வாயிலாக), 04.08.2016 வியாழக்கிழமையன்று நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவியிலிருந்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலராக பணிமாறுதல் குறித்த கலந்தாய்வும் (இணையதளம் வாயிலாக), 06.08.2016 சனிக்கிழமையன்று நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பொது மாறுதல் குறித்தும், நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பதவி உயர்வு குறித்தும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணிநிரவல் குறித்தும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் (ஒன்றியத்திற்குள்) குறித்தும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு குறித்தும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் – மாவட்டத்திற்குள் (ஒன்றியம் விட்டு ஒன்றியம்) குறித்தும் கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

இதேபோன்று 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பொது மாறுதல் குறித்தும், தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பதவி உயர்வு குறித்தும், 13.08.2016 சனிக்கிழமையன்று இடைநிலை ஆசிரியர்களுக்கான பணிநிரவல் குறித்தும், 14.08.2016 ஞாயிற்றுக்கிழமையன்று இடைநிலை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் (ஒன்றியத்திற்குள்) குறித்தும், இடைநிலை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் – மாவட்டத்திற்குள் (ஒன்றியம் விட்டு ஒன்றியம்) குறித்தும், 20.08.2016 சனிக்கிழமையன்று பட்டதாரி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் – மாவட்டம் விட்டு மாவட்டம் (இணையதளம் வாயிலாக) குறித்தும், 21.08.2016 ஞாயிற்றுக்கிழமையன்று இடைநிலை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் – மாவட்டம் விட்டு மாவட்டம் (இணையதளம் வாயிலாக) குறித்தும் கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**